**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No. 380/2022**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW-1 |
| Name | : ராஜசேகரன் |
| Father/Husband's Name | : ஜெயசீலன் |
| Village | : ஊரப்பாக்கம் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 70 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05.08.2025.

**மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி–**

எனக்கும் எதிரிக்கும் Srivihan Apartments மூலம் எங்களது இடத்தில் முதல்கட்ட கட்டுமானம் செய்வதற்கான ஒப்பந்தம் இருந்தது என்றால் சரியல்ல. 03.10.2020 ஆம் தேதியில் எதிரிக்கு நான் கடிதம் அனுப்பினேனா என்றால் சரிதான். எதற்காக அந்த கடிதம் அனுப்பினேன் என்றால் நானும், எதிரியும் Planning Approval–யை Extension செய்வதற்காக கொடுக்கப்பட்ட கடிதம், கட்டுமானத்திற்காக அல்ல. அந்த கடிதத்தில் 2018 ஆம் ஆண்டில் 5 Works–ம் 03.10.2020 ஆம் தேதியில் 3 Works–ம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கடிதத்தில் சொல்லப்பட்டுள்ள ரூ.92,00,000/– 2018 ஆம் ஆண்டில் கொடுத்த முதல் 5 Work களு்க்கான தொகை என்றால் சரிதான். **அந்த கடிதம் எ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. எதிரிகளுடன் போட்ட ஒப்பந்தத்தை 14.08.2024 அன்றுதான் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த கடிதம் ஏகாஷரா ப்ராப்பர்டீஸ் கம்பெனிக்கு ரத்து செய்ய கொடுக்கப்பட்ட கடிதம். இந்த வழக்கிற்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

அந்த கடிதத்தில் எதிரிகளுக்கும் நோட்டீஸ் அனுப்பியதாக உள்ளதா என்றால் உள்ளது. அந்த கடிதத்தில் இந்த வழக்கு விவரங்களை சொல்லி இருக்கிறேனா என்றால் சொல்லி இருக்கிறேன். **14.08.2024 ஆம் தேதியிட்ட அந்த கடிதம் எ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. ஏகாஷரா ப்ராப்பர்டீயில் உள்ள டைரக்டர்கள் இந்த வழக்கின் எதிரிகள்தான் என்றால் சரிதான். நான், எதிரிகள் மற்றும் ஏகாஷரா ப்ராப்பர்டீஸ் Tri-Parte Agreement செய்துகொண்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஒப்பந்தம்தான் அது என்றால் சரிதான், எனக்கு பணம் கொடுக்கவேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. **Tri-Parte Agreement -ன் நகல் எ.த.சா.ஆ 5 ஆக குறியீடு** செய்யப்படுகிறது(புகார்தாரர் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). இந்த **Tri-Parte Agreement - 21.12.2022** ஆம் தேதி போடப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டபிறகுதான் இந்த **Tri-Parte Agreement** போடப்பட்டது என்றால் சரிதான். சுமூகமாக முடித்துக்கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில் போடப்பட்டது. இந்த வழக்கின் விவரத்தை **Tri-Parte Agreement -** ல் சொல்லப்பட்டுள்ளதா என்றால் 10 C -ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு எண்ணை குறிப்பிட்டு அந்த **Tri-Parte Agreement -ல்** சொல்லி இருக்கிறேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த ஒப்பந்தத்தில் உள்ள 2 வது Condition-ல் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் The Party of the third part will repay the loan amount of Rs.62,00,000/- to the party of the first part.Prior to the demand note payment advise from the appropriate authority. Tri-Parte Agreement-ல் சொல்லப்பட்டுள்ள Third Part என்பது இந்த வழக்கின் எதிரிகள் என்றால் சரிதான். ரூ. 62,00,000/-யை எப்போது கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஏற்கனவே கொடுக்கவேண்டிய பணத்தை கொடுக்கவில்லை என்பதை குறித்து Reminder. அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள Appropriate Authority யாரென்றால் DTCP ஆகும். இந்த ஒப்பந்தத்தை போட்டதன் அடிப்படையில் புது நிபந்தனைகள் போட்டதன்பேரில்

இவ்வழக்கின் காசோலை மற்றும் அதனடிப்படையில் நடந்த பரிவர்த்தனைகள் ரத்தாகிவிட்டது என்றால் சரியல்ல. அதனால்தான் அந்த வழக்கை பற்றி ஒப்பந்தத்தில் நான் எதுவும் சொல்லவில்லை என்றாலும் வழக்கை திரும்ப பெற்றுக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு தற்போது அதிலிருந்து பின்வாங்கி வழக்கை நடத்துகிறேன் என்றால் சரியல்ல. அந்த ஒப்பந்தத்தில் Arbitration clause உள்ளது என்றால் சரியல்ல. Arbitration clause–யை ஒப்புக்கொண்டு பிறகு அதை மறுத்து மீண்டும் ஒரு கடிதம் அனுப்பினேன் என்றால் அது ஏகாஷரா ப்ராப்பர்டீஸ்க்கு அனுப்பப்பட்ட கடிதம். அந்த கடிதம் எதிரிகளுக்கும் அனுப்பப்பட்டது என்றால் சரிதான், எதிரிகள் ஏகாஷரா ப்ராப்பர்டீசின் டைரக்டர்கள் என்ற முறையில் அனுப்பபப்பட்டது. இந்த வழக்கிற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. 09.09.2024 ஆம் **தேதியிட்டஅந்த கடிதம் எ.த.சா.ஆ. 6 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. 18.08.2021 ஆம் தேதி எதிரிகளுக்கு நான் E–mail அனுப்பியிருந்தேன் என்றால் சரிதான், **அந்த E–mail எ.த.சா.ஆ. 7 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. எதிரிகள் 15.08.2021 ஆம் தேதி அனுப்பிய E–mail –க்கான பதில் என்றால் சரிதான், **எதிரிகள் அனுப்பிய 15.08.2021 ஆம் தேதியிட்ட E–mail எ.த.சா.ஆ. 8 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

எதிரிகளுடைய செக்யூரிட்டி காசோலைகள் என்னிடம் இருப்பதாக 18.08.2021 ஆம் தேதி **E–mail –ல்** குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிகளின் காசோலை மேற்சொன்ன தேதியிலிருந்து எந்த தேதிவரை என்னிடம் இருந்தது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 28.08.2021 ஆம் தேதி எதிரி இவ்வழக்கு காசோலையை கொடுத்ததாக நான் புகாரில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை 18.08.2021 ஆம் தேதிக்கு முன்னதாகவே என்னிடம் செக்யூரிட்டி காசோலையாக இருப்பதை ஒத்துக்கொண்டு தற்போது முன்னுக்கு பின் முரணாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் 15.08.2021 ஆம் தேதி அனுப்பிய E–mail–ல் காசோலையை வங்கியில் செலுத்தவேண்டாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், 22.08.2021 ஆம் தேதி வரை காசோலை

செலுத்த வேண்டாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த E-mail-ல் 22.08.2021 ஆம் தேதி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக யூகித்துகொண்டேன் என்றாலும் சரியல்ல. எதிரிகள் காசோலையை வங்கியில் செலுத்த சொல்லவில்லை என்றாலும் நானாக செலுத்திவிட்டு தற்போது எதிரிகளுக்கு எதிராக பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது அசோஸியேஷன் சார்பாக எதிரிகளுடன் யார் யார் தொடர்பில் இருந்தார்கள் என்றால் பிரசிடென்ட் முகமது தாவூத் E-mail அனுப்புவார். குணசேகரன் என்பவரும் தொடர்பு கொண்டாரா என்றால் E-mail ஆரம்பித்தது குணசேகரன் என்பதனால் அவர்பெயரில் E-mail போகும். அவருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அவர் பெயரில் உள்ள E-mail -யை யார் உபயோகித்துகொண்டது என்றால் Sri Vihaan Apartments Welfare Association. எதிரிகள் அவர்கள் உபயோகித்து வந்திருந்த வங்கி கணக்கை முடித்துகொண்டார்கள் என்றும், வேறு ஒரு வங்கி கணக்கிலிருந்து காசோலை தருவதாக E-mail அனுப்பியிருந்தார்களா என்றால் சரிதான். 06.10.2021 ஆம் தேதியிட்ட E-mail **எ.த.சா.ஆ. 9 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. நான் காசோலையை வங்கியில் செலுத்திய அன்றைய தினத்தில் மதியம் 2 மணியளவில் அவர்கள் அனுப்பியிருந்தார்கள்.

நான் E-mail பார்த்தபிறகுதான் காசோலையை அவசரமாக வங்கியில் செலுத்தினேன் என்றாலும், வழக்கிற்காக E-mail வருவதற்கு முன்பாக வங்கியில் காசோலையை செலுத்திவிட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் செக்யூரிட்டிக்காக புதிதாக காசோலை தருவதற்கு தயாராக இருந்தாலும் அதை நான் பெறுவதற்கு தயாராக இல்லாமல் எதிரிகளை மிரட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடு எதிரிகள்மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அசோஸியேஷன் பிரசிடெண்டுக்கும் Whatsapp மூலமாக தகவல் தெரிவிக்கப்பட்டது என்றாலும், அதை மறைத்து எதிரிகளுக்கு எதிராக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனது அசோஸியேஷன் பிரசிடெண்ட் சாட்சியம் அளிப்பாரா என்றால் தேவை என்றால் சாட்சியம் அளிப்பார். எனது அசோஸியேஷனிலிருந்து வழக்கு தாக்கல் செய்வதற்கு எந்த அதிகாரமும் கொடுக்கவில்லை என்றாலும் அவ்வாறு அதிகாரம் இல்லாமல் நான் வழக்கு தாக்கல் செய்தது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அவ்வாறு அதிகாரம் இருப்பதற்கு நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் By Law மூலமாக எனக்கு அதிகாரமுள்ளது. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் எந்த By law–லும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. By law மூலமாக எனக்கு எந்த அதிகாரம் இல்லை என்றாலும், அதனால்தான் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடம் தனிப்பட்ட முறையில் நான் Apartment கேட்டதால் எதிரிகள் அதை மறுத்ததாலும், எதிரிகள் செக்யூரிட்டிக்காக கொடுத்த காசோலையை வைத்து எதிரிகளுக்கு எதிராக பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ம.த.சா.ஆ. 1 காசோலையில் உள்ள தேதி எதிரியால் நிரப்பப்படவில்லை என்றால் சரிதான், அது செக்யூரிட்டிக்காக கொடுத்த காசோலை என்பதனால் தேதிகளை நிரப்புவது எனது உரிமை. எதிரிகளுக்கு தெரிவிக்காமல் அவர்களுடைய காசோலையை நானே நிரப்பி, அவர்கள் அனுமதி இல்லாமலும், வங்கி கணக்கு முடிக்கப்பட்ட விவரம் தெரிந்தும், வங்கியில் செலுத்தினேன் என்றாலும் சரியல்ல. எதிரிகள் வழக்கு காசோலையின்பேரில் எந்த கடனோ, கடன்பொறுப்போ இல்லை என்றாலும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எனது அசோசியேஷனிலிருந்து எந்த அதிகாரமும் பெறாமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதனால் இந்த வழக்கு எந்த முகாந்திரம் இல்லாமல் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு எதிரிகளுடன் மீண்டும் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதால் இந்த வழக்கு செல்லத்தக்கதல்ல என்றாலும், புதிதாக ஏற்படுத்தி கொண்ட நிபந்தனைகள்தான்

**செல்லுபடியாகும் என்றாலும், திரும்பப்பெற்றுகொள்வதாக சொல்லி மீண்டும் வழக்கு மேல் நடத்துவதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.**

மறுவிசாரணை- இல்லை.

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

sd/-S. Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.